


ஆப்கன் போராளிக் குழுக்களின் தலைவர்களுடன் பெஷாவரில் ஓரிரு வாரங்கள் தங்கியிருந்த ஒசாமா பின்லேடனுக்கு, அந்தக் காலகட்டத்தில் ஒரே ஒரு யோசனை மட்டுமே இருந்தது. எப்படி ஆட்களைத் திரட்டலாம்? என்ன சொல்லிக் கூப்பிடலாம்? ஆப்கனிஸ்தானிலிருந்து நூறு இருநூறு பேர் கிடைப்பார்கள். ஆனால், அது போதாது. ஆயிரங்களில் வேண்டும். லட்சங்களில்கூட வேண்டியிருக்கலாம். சகோதர முஸ்லிம்களுக்காக சர்வலோகத்திலிருந்தும் வீரர்கள் வந்தாகவேண்டும். வருபவர்கள் அத்தனை பேரும் வீரர்களாக இருக்கமுடியாது. ஆட்கள் வரக்கூடும். அவர்களை வீரர்களாக்குவது தனிக் காரியம். எப்படி இது சாத்தியம்?

அப்போதுதான் அவர், இஸ்லாமாபாத்திலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் (International Islamic University) பேராசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த டாக்டர் அப்துல்லா அஸம் (Dr. Abdullah Azzam) என்பவரைத் தற்செயலாகச் சந்தித்தார்.

டாக்டர் அப்துல்லா, சாதாரணமான ஆள் இல்லை. நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத அளவுக்குப் படித்த பெரும் பண்டிதர். அல் குர் ஆனில் அத்தாரிட்டி. ஜோர்டன் குடியுரிமை பெற்ற பாலஸ்தீனியர். ஒரு காலத்தில் யாசிர் அராஃபத்துடன் இணைந்து பாலஸ்தீன் விடுதலைப் போராட்டத்தை முன் நடத்திச் சென்றவர். ஓர் உறையில் இரண்டு வாள்கள் இருக்கமுடியாது இல்லையா? ஆகவே, முட்டிக்கொண்டுவிட்டது. பி.எல்.ஓ.விலிருந்து விலகி, தனியாவர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். பிறகு, ஒன்றும் சரிப்படாமல் பாகிஸ்தானுக்கு வந்து வாத்தியார் உத்தியோகம் பார்க்கத் தொடங்கிவிட்டார்.

ஒசாமா அவரைச் சந்தித்தபோது, டாக்டர் அப்துல்லாவுக்கு நாற்பத்தியொரு வயது. இளைஞர் என்று சொல்லிவிட முடியாது. மூத்தகுடிமக்கள் லிஸ்டிலும் சேர்க்கமுடியாது. உற்சாகமாக இருந்தார். துடிப்பாக இருந்தார். 'இஸ்லாமிய சகோதரத்துவம்' என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்து உலகெங்கும் உள்ள முஸ்லிம்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பது அவரது கனவு.

அடடே, ஒசாமாவுக்கும் அதுவேதான் லட்சியமல்லவா. ஆகவே, சுலபத்தில் நெருங்கிவிட்டார்கள். இதில் விசேஷம் என்னவென்றால், டாக்டரும் ஒசாமாவும் நண்பர்கள் போல வெளியே தெரிந்தாலும், உண்மையில் அவரை ஒசாமா தன் குருவாகத்தான் கருதினார். பயபக்தியுடன்தான் பேசுவார். அட, தனக்குப் பிறந்த முதல் மகனுக்கே அவர் அப்துல்லா என்றுதான் பெயர் வைத்தார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

அப்படியாகப்பட்ட உறவு மேலும் மேலும் புஷ்டியாக வளர, ஒசாமா அவரிடம் ஆப்கன் போராளிகளின் கனவு குறித்து எடுத்துச் சொல்லி, எப்படி உதவலாம் என்று கேட்டார்.

ஒரே ஆச்சர்யமாகப் போய்விட்டது அப்துல்லா அஸமுக்கு. ஏனெனில், அவரும் இப்படி யாராவது தம்மிடம் வரமாட்டார்களா என்றுதான் ஏங்கிக்கொண்டிருந்தார்! அவர் சந்தேகமில்லாமல் ஒரு சக்தி. ஆனால், செயல்படுத்த ஒரு கருவி வேண்டியிருந்தது. துப்பாக்கியாகவும் பீரங்கியாகவும் அவரால் இருக்கமுடியும். உள்ளே வெடிபொருளாக இருக்க ஆட்கள் தேவைப்பட்டார்கள்.

அவரால் திசைகாட்ட முடியும். படகு செலுத்த மாலுமிகள் வேண்டியிருந்தார்கள். ஒன்றல்ல, நூறல்ல, ஆயிரமல்ல. லட்சக்கணக்கில் ஆட்களை அவரிடம் அளித்தாலும், ஓரிரவில் அத்தனை பேரையும் அவரது மாணவர்களாக ஆக்கிக்கொண்டுவிட அவரால் முடியும். அவருக்குப் பல கனவுகள் இருந்தன. அகண்ட இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் என்பது அதில் பெருங்கனவு. அடிமை வாழ்வில் அவதிப்படும் இஸ்லாமிய சமூகத்தினர், எங்கிருந்தாலும் தேடிச்சென்று விடுதலை பெற்றுத்தருவது அந்தக் கனவின் முதல் அத்தியாயம்.

இதற்கு ஒசாமாவைக் காட்டிலும் உன்னதமான ஆசாமி கிடைக்கமாட்டார் என்று தீர்மானமே செய்துவிட்டார். ஆகவே, அவர் தமது திட்டத்தை விரிவாக விளக்க ஆரம்பித்தார்.

உலகம் முழுக்கச் சுற்றி, இஸ்லாமியர்களைத் திரட்டி, அவர்கள் மத்தியிலிருந்து விடுதலை வேட்கைமிக்க இளைஞர்களைப் பொறுக்கி எடுத்து அவர் ஆப்கனிஸ்தானுக்கு அனுப்பிக்கொண்டே இருப்பார். கூடவே உலகெங்கும் வசிக்கும் பணக்கார முஸ்லிம்களிடம் போய்க் கையேந்தி நிதி திரட்டியும் அனுப்பிவைப்பார். அந்தக் காசை வைத்துக்கொண்டு, வருகிற இளைஞர்களுக்கு பாகிஸ்தானிலும் ஆப்கனிஸ்தான் காடுகளிலும் கூடாரம் அடித்து க்ளாஸ் எடுக்க வேண்டியது ஒசாமாவின் பொறுப்பு!

“ஆயுதம் ஏந்தச் சொல்லிக்கொடுத்தால் மட்டும் போதாது. நமது இளைஞர்களுக்குச் சித்தாந்த பலம் வேண்டும். புத்தியில் அவர்கள் வீரர்களாக வேண்டும். மார்க்கப் பற்றை அடித்தளமாக வைத்து அதற்கு மேல் விடுதலை உணர்ச்சியைக் கோட்டையாக எழுப்பவேண்டும்” என்று சொன்னார் டாக்டர் அப்துல்லா.

ஒருவழியாக 1984-ம் ஆண்டு Afgan Service Bureau என்கிற அமைப்பைத் தொடங்கினார் ஒசாமா. இப்படிச் சொல்வது ஒருவேளை தப்பு. இருவரும் சேர்ந்து தொடங்கிய அமைப்புதான் அது. அப்துல்லா உலகம் சுற்றும் வாலிபரானார்; ஒசாமா உட்கார்ந்து க்ளாஸ் எடுக்கும் வாத்தியார் ஆனார்.

அப்துல்லா சுற்றுப்பயணம் தொடங்கிய ஓரிரு மாதங்களிலேயே, எங்கெங்கிருந்தோ ஆட்களையும் நிதியையும் திரட்டி அனுப்ப ஆரம்பித்துவிட்டார். முதலில் பத்துப் பத்தாக, ஐம்பது ஐம்பதாக ஆட்கள் வந்தார்கள். அஞ்சும் பத்துமாகப் பணம் வந்தது. போகப் போக, கொத்துக்கொத்தாக வந்து சேர ஆரம்பித்தார்கள்; கூடை கூடையாகப் பணம் குவிய ஆரம்பித்தது. ஒசாமாவும் தம் பங்குக்கு ஏராளமான பணத்தைக் கொண்டுவந்து கொட்டி ஆயுதங்கள் வாங்கினார். அனைத்தும் பாகிஸ்தானில் பதுக்கிவைக்கப்பட்டன. ஆப்கன் - பாகிஸ்தான் எல்லையோர மலைப் பகுதிகளில் கூடாரமடித்து போர்ப் பயிற்சிகள் ஆரம்பமாயின.

இத்தனைக்கும் ஒசாமாவுக்கு அப்போது ஆயுதங்களைக் கையாளத் தெரியாது. ஆனால் பழகிக் கொண்டார். அவரைப் பொறுத்தவரை, அவரிடம் இருந்த மிகச் சிறந்த ஆயுதம் அவரேதான்! நோக்கமும் செயலும் ஒன்றாகவே இருந்ததால், மிகச் சுலபத்தில் ஆயுதப் பயிற்சி பெற்று, மற்றவர்களுக்குக் கற்றுத்தரவும் அவரால் முடிந்தது. ஒரு சில வருடங்களில் நூற்றுக்கணக்கான மாணவர்களின் விருப்பமான குருவாகவே அவர் ஆகிப்போனார்.

இந்தச் சமயத்தில்தான் ஓர் எதிர்பாராத தடாலடிச் சம்பவம் நடந்தது.

அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.வுக்கு, உலகத்திலேயே பிரமாதமான வேலை என்பது அடுத்தவர்களை வேவு பார்ப்பதுதான். ஆத்ம சுத்தியுடன் தப்புச் செய்யும் கோஷ்டி அது. நியாயமாக மாயவலை க்ரூப் லிஸ்டில் அவர்களையும் சேர்க்கவேண்டும். துரதிருஷ்டவசமாக ஓர் அரசாங்க அமைப்பாக அவர்கள் இருப்பதால், இந்தப் பட்டியலுக்குள் வரமுடியாத துர்ப்பாக்கியசாலிகளாகிவிட்டார்கள்.

அது நிற்க. ஆப்கனிஸ்தானில் சோவியத் படைகளுக்கு எதிராக ஆட்களைத் திரட்டி நிறுத்திக் கொண்டிருந்த ஒசாமாவை, சி.ஐ.ஏ. கண்காணிக்க ஆரம்பித்தது. யார் இந்த ஆசாமி? எங்கிருந்து புறப்பட்டு வந்து, என்ன செய்துகொண்டிருக்கிறான்? இத்தனை குறுகிய காலத்தில் எப்படி இத்தனை பேருக்கு இவனால் போர்ப் பயிற்சி தரமுடிகிறது? எத்தனை ஆயுதங்கள் வைத்திருக்கிறார்கள்? எங்கிருந்து பணம் வருகிறது?

மோப்பம் பிடிக்கத் தொடங்கினார்கள். ஒசாமாவின் பின்னணி குறித்துத் தெரிந்தபோது, உண்மையில் சி.ஐ.ஏ. மட்டுமல்ல; அந்நாளைய அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகனே ஆச்சர்யப்பட்டுப் போனார்.

இது பிரமாதமல்லவா! ஆப்கனில் சோவியத் ஆக்கிரமிப்பை ஒழித்துக்கட்ட, அமெரிக்கா சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்த நேரம் அது. நேரடியாக யுத்தத்தில் இறங்கமுடியாது. ஏதாவது டேபிளுக்கு அடியில்தான் காரியம் செய்தாக வேண்டும். என்ன செய்யலாம் என்று சிண்டைப் பிய்த்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும், இப்படி ஆப்கன் விடுதலை ஒன்றே குறி என்று போர்ப் பயிற்சி அளித்துக்கொண்டிருக்கும் ஒசாமாவை வளைத்துப் போட்டுவிட்டால் வேலை மிச்சமல்லவா?

குள்ள நரிகளுக்கும் சி.ஐ.ஏ. ஆபீஸர்களுக்கும் மட்டுமே தோன்றக்கூடிய யோசனை இது.

இந்த யோசனை அப்போது ரீகனுக்கும் சரியாகவே பட்டது. அமெரிக்கா அப்போது ‘எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்’ என்று இருந்த நேரம். ஆகவே, அதிபரின் ரகசிய அனுமதியுடன் ஒசாமா பின்லேடனை வளைத்துப்போடும் திட்டத்தைத் தொடங்கியது சி.ஐ.ஏ.

வந்து பார்த்துக் குசலம் விசாரித்துவிட்டு, என்ன வேண்டும் என்று கேட்டார்கள்.

என்ன வேண்டும்? பணம் வேண்டும். ஆயுதங்கள் வேண்டும். நவீன தொழில்நுட்ப சாதனங்கள் வேண்டும். போராளிகளுக்கு வேறென்ன வேண்டும்? வேளைக்கு ரொட்டி கிடைத்தால் யதேஷ்டம்.

ப்பூ! இவ்வளவுதானே, இந்தா என்றது அமெரிக்க ஜீபூம்பா.

உண்மையில் ஒசாமாவாலேயே நம்பமுடியாத உதவி அது. எத்தனை பணம்! எவ்வளவு ஆயுதங்கள்! கொண்டு வந்து குவித்துவிட்டார்கள். மேற்கொண்டு என்ன உதவி வேண்டுமென்றாலும் தயங்காமல் கேட்கலாம் என்று ஓப்பன் டிக்கெட்டும் கொடுத்துவிட்டு ஊர் போய்ச் சேர்ந்தார்கள் சி.ஐ.ஏ. ஆபீஸர்கள். போகிற போக்கில் அமெரிக்க அரசின் விருந்தாளியாக வந்து, ஊர் சுற்றிப் பார்க்கும்படி ஒசாமாவுக்கு ஓர் அழைப்பும் விடுத்தார்கள்.

“எனக்கு அமெரிக்காவில் என்ன வேலை? என் வேலை ஆப்கனில் இருக்கிறது. தவிர, விருந்து சாப்பிடும் உத்தேசம் ஏதும் எனக்கில்லை. மற்றபடி உங்கள் ஒத்தாசைக்கு நன்றி” என்று சொல்லிவிட்டார் ஒசாமா.

ஆனால், இந்த அழைப்பை அங்கே உலகம் சுற்றும் வாலிபர் டாக்டர் அப்துல்லா நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். அமெரிக்காவில் இல்லாத ஆட்களா, செல்வங்களா?

அரசின் அதிகாரபூர்வ விருந்தாளியாக தேசம் முழுவதும் சுற்றி, நிதி திரட்டி அனுப்பிக்கொண்டே இருந்தார்.

இந்தப் பக்கம் ஆப்கன் காடுகளில் பயிற்சி முடித்த இளம் போராளிகளை, யுத்த முனைக்கு அனுப்ப ஆரம்பித்தார் ஒசாமா. சோவியத் படைகளுக்கு எதிரே அது ஒரு சோட்டா படைதான். ஆனாலும், ஒசாமாவின் பயிற்சியும், வலுவான ஆயுத சௌகரியங்களும் இருந்ததால், அவர்கள்

ஆக்ரோஷமாகப் போரிட ஆரம்பித்தார்கள்.

சோவியத் யூனியன் இந்த விஷயத்தில் கொஞ்சம் தத்தியாகத்தான் இருந்திருக்கிறது. யுத்தம் தொடங்கி ரொம்ப காலம் வரை அவர்கள் ஒசாமாவை மோப்பம் பிடிக்கவேயில்லை. எங்கிருந்து இந்த இளைஞர்கள் வருகிறார்கள், யாரிடம் பயிற்சி பெறுகிறார்கள், எங்கிருந்து ஆயுதங்கள் இவர்களுக்குக் கிடைக்கின்றன என்று புரியாமல் சிண்டைப் பிய்த்துக்கொண்டார்கள்.

இதற்குள் வருடங்களே ஓடிப்போய்விட்டன.

ஆப்கன் - சோவியத் யுத்தம் என்பது ஒரு கஜகர்ப்பக் காலம் நடந்த யுத்தம். அதாவது, சுமார் பத்தாண்டுகள். இந்தக் காலத்தில் ஒசாமா தனது சொந்த நாடு, சொந்தபந்தம், மனைவி மக்கள் யாரையும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும். (பத்து வருஷத்தில் அவர் மொத்தமே இரண்டு முறைதான் சவூதிக்குச் சென்று திரும்பியிருக்கிறார் என்று தெரிகிறது. அதிலும் ஒருமுறை போனது சந்தேகாஸ்பதம்.)

1980-ல் தொடங்கிய இந்த யுத்தம், 1989 கடைசியில் ஒருமாதிரி முடிவுக்கு வரும்போலிருந்தது. ரஷ்யாவில் மக்கள் வெறுத்துப் போய் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டமெல்லாம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். எத்தனை வருஷம் அவர்களும்தான் உறவினர்களைப் போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டுச் சும்மா இருப்பார்கள்?

ஆகவே, சோவியத் அரசு தனது வீரர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள முடிவு செய்தது.

ஒரு வழியாக ஆப்கனிஸ்தானுக்கு சுதந்திரம் வந்தபோது, அதைப் பெற்றுத்தந்த பெருமை ஒசாமா பின்லேடனுக்கு நூறு சதவிகிதம் வந்து சேரத் தயாராக இருந்தது.

அப்போதுதான் அமெரிக்கா ஒரு வேலை செய்தது. வழக்கமான அமெரிக்க வேலைதான் என்றாலும், ஒசாமா யார், எப்படிப்பட்டவர் என்பது தெரியாமல் அவருக்கே அல்வா கொடுக்க நினைத்த காரியம் அது.

முதல் முறையாக அப்போதுதான் ஒசாமாவும், அமெரிக்காவின் பக்கம் கோபமாகத் திரும்பிப் பார்த்தார்.